## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், விரைவு நீதிமன்றம் எண்.1, ஈரோடு.

**நாள் : 01.10.2024** **1** **STC 16/2024**

**பெயர் : சிவக்குமார் - பு.சா.1**

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

எனது சொந்து ஊர் எது என்றால் ஈரோடு, எனக்கு என்ன தொழில் என்றால் விசைத்தறி வைத்து தொழில் செய்கிறேன். ஒரு நாளைக்கு என்ன கூலி என்றால் ரூ.700 ஆகும். குடியிருக்கும் வீடு சொந்த வீடா என்றால் வாடகை வீடு. வாடகை மாதம் ரூ. 6000. எனக்கு எத்தனை குழந்தைககள் என்றால் 2 குழந்தைகள். எனது மகன் MBA படித்துவருகிறார். மகள் Auditing படித்து வருகிறார். இருவரும் தனியார் கல்லூரியில் படிக்கிறார்கள். இருவருக்கும் மாதக்கட்டணம் எவ்வளவு என்றால் 6 மாதத்திற்கு ஒரு முறை மகளுக்கு ரூ.28 ஆயிரம் மகனுக்கு ரூ.33 ஆயிரம். எனது விசைத்தறி தொழிலில் தொடர்ச்சியாக வேலை உள்ளதா என்றால் கடந்த 6 மாதமாக வேலை குறைவாக உள்ளது.

எதிரி எவ்வாறு பழக்கம் என்றால் ஒரே இடத்தில் வேலை செய்து வந்தோம். அந்த வகையில் பழக்கம்,15 வருடமாக நண்பர். எதிரி நான் வாங்குவது போல்தான் கூலி வாங்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி எங்கு குடியிருக்கிறார் என்றால் நாராயண வலசு ஹவுசிங்போர்டில் ஈரோட்டில் குடியிருக்கிறார். வீதி, கதவு எண் தெரியாது. எதிரிக்கு நான் கொடுத்தாக சொல்லும் தொகை எவ்வளவு என்றால் ரூ.4.50 லட்சம். எனக்கு பணம் எவ்வாறு வந்தது என்றால் இடம் ஒன்று விற்பனை செய்தேன் அந்த பணத்தை கையில் வைத்திருந்தேன். எதிரி கேட்டபோது அந்த பணத்தை கொடுத்தேன்.

Judicial Magistrate,
Fast Track Court No.I,
Erode.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED150001992024/truecopy/order-2.pdf

www.ecourtsindia.com

**பெயர் : சிவக்குமார் - பு.சா.1**

எந்த ஊரில் நிலம் விற்றேன் என்றால் JKK கல்லூரி அருகில் குமாரபாளையத்தில் உள்ள இடத்தை விற்பனை செய்தேன். எந்த தேதியில் விற்பனை செய்தேன் என்றால் 2021 கடைசியில் விற்பனை செய்தேன், தேதி சரியாக நியாபகம் இல்லை. என்ன விலைக்கு விற்பனை செய்தேன் என்றால் ரூ,7,83,000/-க்கு விற்பனை செய்தேன். மேற்படி விற்பனை பத்திரத்தின் நகல் தாக்கல் செய்ய முடியுமா என்றால் நான் மூலப்பத்திரம், அசல் பத்திரம் ஆகியவற்றை கொடுத்துவிட்டேன். அதனால் சார்பதிவாளர் அலுவலகத்தில் நகல் என்னால் தாக்கல் செய்ய இயலாது.

நான் சொன்னவாறு நிலத்தை விற்க வில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு என்ன தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் 26.08.2023ல் கொடுத்தேன். வழக்கு காசோலையில் என் முன்னிலையில் எதிரி கையொப்பம் செய்யவில்லை என்றால் என் முன்னிலையில் தான் கையொப்பம் செய்தார். அதில் உள்ள வாசகங்கள் யார் எழுதினார்கள் என்றால் வங்கியில் உள்ள நபரை வைத்து காசோலையை நிரப்பினேன். எதிரி எனக்கு காசோலை கொடுக்கும் போது தொகை நிரப்பிக்கொடுத்தார்.

எனது தம்பி பெயர் முருகேசன் என்றால் ஆமாம். அவர் பைனான்ஸ் தொழில் செய்கிறார் என்றால் ஆமாம். எனது தம்பியுடம் பேச்சு வார்த்தை இல்லை. எதிரியின் மனைவியின் நிலத்தை நான் கிரையம் வாங்கினேனா என்றால் இல்லை, எதிரியின் இடத்தை எனது தங்கையின் பெயரில் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் எனது தங்கை தொகை கொடுத்து கிரையம் வாங்கியுள்ளார், எனக்கும் அதற்கும் சம்மந்தம் இல்லை. எதிரி ஒரு நாளைக்கு ரூ.700 சம்பளம் வாங்கும் நிலையில் அவருக்கு நான் வழக்கு தொகை கடனாக கொடுத்திருக்க முடியாது என்றால் எதிரிக்கு சொந்த வீடு நிலம் உள்ளது. 15 வருடமாக நண்பர் அதனால் கொடுத்தேன்.

Judicial Magistrate,
Fast Track Court No.I,
Erode.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED150001992024/truecopy/order-2.pdf

www.ecourtsindia.com

**பெயர் : சிவக்குமார் - பு.சா.1**

எதிரிக்கு வீடு, நிலம் உள்ளது எனக்கு தெரியாது என்றால் எதிரி அழைத்து சென்று காட்டியுள்ளார் எதிரி சொன்ன வகையில் தெரியும். எதிரி சொந்தமாக இடம் உள்ளது என சொன்னதை நம்பி கடன் கொடுத்தேனா என்றால் ஆமாம். வட்டி எவ்வளவு என்றால் ரூ.2 ரூபாய் வட்டி. நான் விற்பனை செய்த இடத்தை வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேனா என்ாறல் இல்லை. கடந்த 2 வருடமாக வருமான வரிகணக்கு தாக்கல் செய்கிறேன். எவ்வளவு வருட வருமானம் காண்பித்துள்ளேன் என்றால் கணக்கை பார்த்தால் தான் தெரியும்.

நான் கடன் கொடுத்தாக சொல்வது தவறு என்றும் என் தம்பியின் பைனான்ஸ்சில் எதிரி ரூ.50,000/ கடன் வாங்கி அந்த தொகைக்கு பிணையாக வழக்கு காசோலை கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. அந்த தொகைக்கு எதிரியின் மனைவி பெயரில் உள்ள சொத்தை எனது தங்கையின் பெயரில் கிரையம் எழுதிக்கொண்டோம் என்றால் சரியல்ல. கடனை எங்கு வைத்துக்கொடுத்தேன் என்றால் எனது வீட்டிற்கு வந்து எதிரி வாங்கினார். நான் பணம் கொடுக்கும் போது யார்யார் இருந்தார்கள் என்றால் யாரும் இல்லை, நான் மட்டும்தான் இருந்தேன். பணம் வாங்கும்போது எதிரியுடன் யார் வந்தார்கள் என்றால் எதிரி மட்டும்தான் வந்தார். கடன் எந்த நேரத்தில் கொடுத்தேன் என்றால் காலை 11 மணி இருக்கும். என்ன கிழமை என்றால் கிழமை நியாபகம் இல்லை. கடன் தொகை எத்தனை ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன் என்றால் 500 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன்.

Judicial Magistrate,
Fast Track Court No.I,
Erode.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED150001992024/truecopy/order-2.pdf

www.ecourtsindia.com

பெயர் : சிவக்குமார் - பு.சா.1

பொதுவாக சொத்து விற்பனை செய்யும் போது வங்கி மூலமாக கொடுப்பார்கள் என்றால் சரிதான். புகார்தாரர் தற்போது ரொக்கமாக கொடுப்பார் என்று கூறுகிறார். நான் விற்பனை செய்த இடத்திற்கு உண்டான பத்திரத்தில் விற்பனை தொகை குறிப்பிட்டிருக்கும் என்றால் சரிதான். அதில் எவ்வளவு தொகை போட்டிருக்கும் என்ற விபரம் தெரியுமா என்றால் நியாபகம் இல்லை. எதிரி எனக்கு கொடுத்த காசோலைக்கு எந்த பணப்பரிமாற்றமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. என் தம்பியின் பைனான்சில் வாங்கிய கடனுக்காக பாதுகாப்பிற்காக கொடுத்த காசோலையை பயன்படுத்தி என் மூலமாக எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி வாங்கிய ரூ.50,000/-க்கு பதிலாக நானும் எனது தம்பியும் எதிரியின் மனைவி பெயரில் உள்ள இடத்தை என் தங்கை பெயரில் கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. நான் கூடுதல் வட்டிகாகவும், எதிரியிடம் சட்ட விரோதமாக ஆதாயம் பெறவும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒம்/- சாட்சி : சிவக்குமார்

**நீதித்துறை நடுவர்,**

**விரைவு நீதிமன்றம் எண்.1,**

**ஈரோடு.**

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED15001992024/truecopy/order-2.pdf